


# ஆவியின் கனி

| | |
|---|---|
| **அன்பு : தேவ அன்பு**<br>**ரோமர் 5:5**<br>**1கொரி 13** | எந்தவிதமான சொந்த இலாபம் பெறும் நோக்கம் இல்லாமல் பிரதிபலன் எதிர்பார்க்காமல் கரிசனையோடு இன்னொரு மனிதனின் உயர்ந்த நன்மையை தேடுவது.<br>நிபந்தனைகளும், எதிர்பார்ப்புமின்றி தியாகத்தோடு கொடுக்கும் தன்மை படைத்தது |
| **சந்தோஷம்**<br>**சங் 119 : 116**<br>**1 பேது 1 : 8** | தேவ சந்தோஷம், இரட்சிப்பின் சந்தோஷம்<br>பரலோகத்தில் நம்பெயர் எழுதப்பட்டிருக்கிறதால் சந்தோஷம்<br>கிறிஸ்துவுக்குள் தேவனுடைய செய்கையாக நாம் இருப்பதால் சந்தோஷம்<br>விசுவாசிகளுக்கு சொந்தமான அன்பு, கிருபை, ஆசீர்வாதங்கள், வாக்குத்தத்தங்கள், தேவனுக்கு சம்பமாயிருத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் உணரும் மகிழ்ச்சி |
| **சமாதானம்**<br>**தேவ சமாதானம்**<br>**பிலி 4 : 7**<br>**ரோம 15 : 33**<br>**1 தெச 5 : 23**<br>**எபி 13 : 20** | உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அமைதலோடே சிறந்து காணப்படுகிற நிலை.<br>மனதில் சமாதானம், மனஅமைதி எல்லா மனுஷருடனும் சமாதானயிருப்பது<br>விசுவாசிக்கும் பரம பிதாவுக்குமிடையே எல்லாம் சுமூகமாக உள்ளது என்று கூறும் அறிவின் அடிப்படையில் இருதயத்திலும் மனதிலும் பெறும் அமைதி |
| **நீடிய பொறுமை**<br>**எபே 4 : 2**<br>**எபி 12 : 1**<br>**ரோமர் 12 : 12** | விசேஷித்த தெய்வீக குணம்<br>சரியான நேரத்திற்காக காத்திருக்கும் தன்மை. சகிப்புதன்மை, துன்பத்தை அனுபவிப்பது<br>கோபப்படுவதற்கு, சோர்வுறுவதற்கு, தாமதிப்பது<br>உபத்திரவத்திலே பொறுமையாயிருப்பது |
| **தயவு**<br>**எபே 4 : 32**<br>**கொலோ 3 : 12** | இரக்கம், மனஉருக்கம், கிருபை யாரையும் புண்படுத்தாத, வேதனைப்படுத்த விரும்பாத தன்மை |

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

| | |
|---|---|
| **நற்குணம்**<br>**மதி 21 : 12, 13**<br>**லூக் 7 : 37 - 50** | எல்லா நன்மையும் அடங்கியது<br>வேதவசனத்தை ஆராய்ந்து அதன்படிநடந்தால் நற்குணசாலிஆகலாம்.<br>சத்தியத்தையும் நீதியையும் ஆவலோடு நாடுவதும் தீமையை வெறுப்பதும் அன்பின் கிரியைகளிலும் தீமையை கண்டித்து சரிப்படுத்துவதிலும் வெளிப்பட முடியும். |
| **விசுவாசம்**<br>**அப் 3 : 16** | நம்பக்கூடிய தன்மை, தேவனை சார்ந்திருக்கக் கூடியது பூரணமானது.<br>வாக்குறுதியினால், அர்ப்பணிப்பினால் நம்பத்தகுந்த குணத்தினால் நேர்மையினால் ஒருவர் தம்மோடு ஐக்கியப்பட்ட ஒருவரிடம் வைத்துள்ள உறுதியான வளைந்து கொடுக்காத உண்மை விசுவாசம்.<br>தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்த்து செயல்படும் திறமைதான் விசுவாசம் |
| **சாந்தம்**<br>**இயேசு மத் 11:29 மத் 23**<br>**மாற் 3:5**<br>**பவுல் 2கொரி 10:1, 4 – 6**<br>**கலா 1 : 9**<br>**மோசே எண் 12: 3, யாத் 32 : 19 - 20** | தோற்றம். பேச்சு, செயல் ஆகியவற்றில் கோபமின்மை, அமைதி, பணிவையும், சாதுவான தன்மையையும், சிநேகத்தையும் குறிக்கும்.<br>பலத்தோடும் தைரியத்தோடும் இணைந்த அடக்கம் ஒருவர் கோபப்பட வேண்டிய நேரம் கோபப்பட்டு தாழ்மையோடு அடங்கி இருக்க வேண்டிய நேரம் அடங்கியிருப்பது. |
| **இச்சையடக்கம்**<br>**1 கொரி 9 : 25**<br>**தீத்து 1 : 8** | தன்னடக்கம், திடமானது நமது நடத்தையே கட்டுப்படுத்துவது ஒருவருடைய திருமண வாக்குறுதியில் உண்மையாயிருப்பது உட்பட ஒருவருடைய சொந்த ஆசைகளையும் இச்சைகளையும் அடக்கி ஆள்வது மேலும் பரிசுத்தமாய் இருப்பது |

**"அன்பே" – நம்மை நிறைவுள்ளவர்களாய் மாற்றுகிறது (1 கொரி 13: 10)**

**"பொறுமை" – நிறைவுள்ளவர்களாய் பூரணமாய் மாற்றும் (யாக் 1: 4)**

**"உண்மையுள்ளவன்" பரிபூரண ஆசிர்வாதங்களைப் பெறுவான் (நீதி 28 : 20)**

இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

ஆவிக்கேற்றபடி நடப்பது என்பது உனது நடத்தையை பார். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உன்னிடம் ஆவியின் கனியாகிய “அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்” காணப்படுமானால் நீ ஆவியினால் நடத்தபடுகிறாய்.

1 கொரி 13 அதிகாரம் 13 வசனம் “விசுவாசம், நம்பிக்கை, அன்பு”

இம்மூன்றில் பெரியது அன்பே “அன்பே பிரதானம்”

2 யோவான் சத்தியம், அன்பு இதில் பெரியது சத்தியமே

சத்தியத்திலே நடந்து அன்பு செலுத்து.

சத்தியத்திலே நடப்பது – நமது வாழ்க்கை முறையை தேவனுடைய வார்த்தையின்படி சரிசெய்வது.

